සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය **I, II**
**முயற்சியாண்மைக் கற்கை I, II**
Entrepreneurship Studies **I, II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## முயற்சியாண்மைக் கற்கை I

**அறிவுறுத்தல்கள் :**

✳ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
✳ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**
✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** ராகுல் என்பவர் தனது சிறுபராத்தில் இருந்தே ஏனைய நபர்களில் இருந்து வித்தியாசமானவராகவும் வித்தியாசமான விடயங்களைச் செய்பவராகவும் காணப்படுபவர் ஆவார். இதிலிருந்து ராகுல் எடுத்துக்காட்டும் முயற்சியாண்மைசார் குணாம்சம்
(1) ஆக்கத்திறன் (2) சுதந்திரமாக இருத்தல்
(3) இடரை ஏற்றுக்கொள்ளல் (4) நம்பிக்கையுடன் இருத்தல்

**2.** வணிகச் சூழலைக் கற்றுக்கொண்டு, வணிக வாய்ப்பை இனங்கண்டு, அதில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வணிகமொன்றை ஆரம்பித்தல் ராஜாவின் கனவாகும். இக்கூற்றின்படி ராஜாவுக்குத் தேவைப்படுவது
(1) சமூக முயற்சியாளர் ஆவதற்காகும். (2) வணிக முயற்சியாளர் ஆவதற்காகும்.
(3) அக முயற்சியாளர் ஆவதற்காகும். (4) நிறுவனம்சார் முயற்சியாளர் ஆவதற்காகும்.

**3.** தனது வணிகத்தின் மூலம் இலாபத்தை உழைக்கும் பல்வேறு முதலீட்டு வாய்ப்புக்களில் முதலீடு செய்ய சுபைர் எதிர்பார்க்கின்றார். இதன் மூலம் சுபைரினால் எடுத்துக்காட்டப்படும் முயற்சியாண்மைசார் குணாம்சம்
(1) இடரை ஏற்றுக்கொள்ளல் (2) புத்தாக்கம்
(3) நெகிழ்வுத்தன்மை (4) சுதந்திரமாக இருத்தல்

**4.** சுபாசினி என்பவர் சிறு உணவுச்சாலை ஒன்றை நடாத்துவதுடன் அதனை பகல் வேளைகளில் மட்டுமே திறக்கின்றார். இங்கு சுபாசினியின் ஆக்கத்திறனுக்கு எதிரான தடையாக அமைந்துள்ளது,
(1) தவறுகளுக்கும் விமர்சனங்களுக்குமான பயம் ஆகும்.
(2) சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் பாரம்பரியங்களை அறியாமல் பின்பற்றுதல் ஆகும்.
(3) தர்க்கரீதியான அடிப்படையில் தொழிற்படாதிருத்தல் ஆகும்.
(4) நம்பிக்கை மற்றும் மனப்பாங்குகள் மீது உறுதியாக இருத்தல் ஆகும்.

**5.** மரத்தினாலான கதவு நிலைகள், பிளாஸ்த்திக்கினாலான கதவு நிலைகளாக புத்தாக்கம் செய்யப்பட்டமையை
(1) ஒரு பிரதியீடாகக் கருதலாம். (2) ஒரு இணைவாகக் கருதலாம்.
(3) ஒரு மறுசீரமைப்பாகக் கருதலாம். (4) ஒரு மேலதிக சேர்க்கையாகக் கருதலாம்.

**6.** தற்போது காணப்படுகின்ற உற்பத்திப்பொருளையோ அல்லது சேவையையோ தற்போது காணப்படுகின்ற சந்தைக்கு வழங்குவதனூடாக
(1) நுகர்வோர் கிரய ஈர்ப்பைக் குறைக்கலாம்.
(2) நுகர்வோர் கிரய ஈர்ப்பை அதிகரிக்கலாம்.
(3) புதிய வாடிக்கையாளர்களை உருவாக்கலாம்.
(4) சந்தையைக் கற்றுக்கொள்வதற்கான செலவு அதிகரிக்கலாம்.

[பக். 2 ஐப் பார்க்க

7. வணிக எண்ணம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வணிக எண்ணங்கள் பல எண்ணிக்கையானவை அல்ல.
(2) வணிக எண்ணங்கள் திறந்தவை அல்ல.
(3) ஒவ்வொரு வணிக எண்ணத்தையும் நடைமுறையில் அமுல்படுத்த முடியும்.
(4) பல்வேறு மூலங்களின் ஊடாக பெரும்பாலான வணிக எண்ணங்களை உருவாக்க முடியும்.

8. சுந்தரம் என்பவர் வாராந்த சந்தையில் அரிசி விற்பனை செய்கின்றார். அரிசிப் பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பு என்பன காரணமாக அதிக எண்ணிக்கையான அரிசி விற்பனையாளர்கள் வாராந்த சந்தைக்கு சமுகமளிக்காமையானது சுந்தரத்தின் அரிசி வணிகத்துக்கு
(1) பலம் ஆகும். (2) வாய்ப்பு ஆகும். (3) பலவீனம் ஆகும். (4) அச்சுறுத்தல் ஆகும்.

9. ஒரு நாட்டில் வயது முதிர்ந்தோர் சனத்தொகை அதிகரித்துச் செல்கின்றமையானது குழந்தைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகங்களுக்கு ஓர் அச்சுறுத்தல் ஆகும். இது உரித்தாவது
(1) சிற்றினச் சூழலுக்காகும். (2) மக்கட்தொகைச் சூழலுக்காகும்.
(3) சமூகச் சூழலுக்காகும். (4) விஞ்ஞான, தொழில்நுட்பச் சூழலுக்காகும்.

10. சிற்றளவு வணிகங்கள் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சிற்றளவு வணிகங்களில் படைப்பாற்றல் திறன்களை இலகுவில் பயன்படுத்த முடியாது.
(2) சிற்றளவு வணிகங்களின் வியாபார நடவடிக்கைகள் பெரும்பாலும் பரந்துபட்ட பிரதேசத்தில் பரவிக் காணப்படும்.
(3) பல வெற்றிகரமான பேரளவு வணிகங்கள் சிற்றளவு வணிகங்களாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(4) சிற்றளவு வணிகங்களுக்கான சந்தை இடைவெளியை இனங்காண்பதன் மூலம் வணிக வாய்ப்புகளுக்குள் நுழைவதென்பது கடினமானதாகும்.

11. சாதிக் என்பவர் அவசியமான தகவல்களை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நியாயமான விலையில் தனது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்கின்றார். இது அவரின்
(1) ஆலோசனைத் திறன்களை எடுத்துக்காட்டுகிறது.
(2) தொடர்பாடல் திறன்களை எடுத்துக்காட்டுகிறது.
(3) உதாரணமாகச் செயற்படும் திறன்களை எடுத்துக்காட்டுகிறது.
(4) எண்ணக்கருவாக்கத் திறன்களை எடுத்துக்காட்டுகிறது.

12. கிராமவாசிகளை ஊழியர்களாகப் பெறுவதன் மூலம் கரீம் என்பவர் கைவினையை அடிப்படையாகக் கொண்ட வணிகத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்குக் கிடைக்கத்தக்க அனுகூலமாகக் காணப்படுவது,
(1) பயன்படுத்தப்படாத ஆற்றல்களைப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமையாகும்.
(2) சமூகத்தின் நலன்புரிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடியதாக உள்ளமையாகும்.
(3) நடவடிக்கைகளில் பன்முகத்தன்மையை உருவாக்கக்கூடியதாக உள்ளமையாகும்.
(4) உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமையாகும்.

13. சரத் என்பவர் கித்துள் மாவைப் பயன்படுத்தி பட்டர் மற்றும் சீஸ் போன்ற புத்தாங்கங்களை மேற்கொண்டு அவற்றைச் சந்தையில் விற்பனை செய்கிறார். இங்கு இவரது புத்தாக்க முறையானது
(1) புதிய கண்டுபிடிப்பு ஆகும். (2) நீடிப்பு ஆகும்.
(3) பிரதிபண்ணல் ஆகும். (4) இணைப்பு ஆகும்.

14. பொருட்களில் காணத்தக்க விசேட குணாம்சத்தை உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?
(1) களஞ்சியப்படுத்தக் கூடியவை
(2) தொட்டுணர முடியாதவை
(3) ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியாதவை
(4) வழங்குனரிடம் இருந்து பிரிக்க முடியாதவை

15. அரசாங்கமானது மோட்டார் வாகன இறக்குமதிகள் மீது அறவிடும் வரி வீதங்களை அதிகரித்தமையானது மோட்டார் வாகனக் கைத்தொழிலில் ஈடுபடும் வணிகர்களுக்கு ஓர் அச்சுறுத்தல் ஆகும். இது
(1) சிற்றினச் சூழலுக்கு உரித்தாகும்.
(2) அரசியல் மற்றும் சட்டச் சூழலுக்கு உரித்தாகும்.
(3) சமூக மற்றும் கலாசாரச் சூழலுக்கு உரித்தாகும்.
(4) பொருளாதாரச் சூழலுக்கு உரித்தாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**16.** முயற்சியாளர் ஒருவர் சர்வதேச வர்த்தகத்தில் தனது வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்களை இனங்காண்பதற்காகப் பகுப்பாய்வு செய்யும் சூழல் எது?
(1) பொருளாதாரச் சூழல் (2) பூகோளச் சூழல்
(3) அரசியல் மற்றும் சட்டச் சூழல் (4) சிற்றினச் சூழல்

**17.** முயற்சியாளர் ஒருவர் தனது புதிய கண்டுபிடிப்புக்கான சட்டப் பாதுகாப்பை எதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்?
(1) ஆக்கவுரிமை மூலம்
(2) வியாபாரக்குறி உரிமையின் மூலம்
(3) கைத்தொழில் வடிவமைப்பு உரிமத்தின் மூலம்
(4) கூட்டிணைத்தற் சான்றிதழ் மூலம்

**18.** இலங்கையில் தற்போது இரண்டாந்தரத் துறைக்கு உரித்தான வணிகம் ஒன்று
(1) பைகளைத் (bag) தயாரித்தல்
(2) அலங்கார மீன்களை இனப்பெருக்கம் செய்தல்
(3) சில்லறை வணிகத்தை நடாத்துதல்
(4) இரத்தினக் கல் அகழ்வு

**19.** முயற்சியாளர் ஒருவர் தனது வணிகத்தை முழுமையான ஒன்றாகக் கருத்திற்கொள்வதன் மூலம் அதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் பொருத்தமான தந்திரோபாயங்களை அமுல்படுத்த முடியுமாயிருப்பது அவரிடம் காணப்படும்,
(1) தொழில்நுட்பத் திறன்கள் காரணமாகவாகும்.
(2) மானிடத் திறன்கள் காரணமாகவாகும்.
(3) எண்ணக்கருவாக்கத் திறன்கள் காரணமாகவாகும்.
(4) தொடர்பாடற் திறன்கள் காரணமாகவாகும்.

**20.** இடர்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் வளங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல் ஆகிய முயற்சியாளர்களின் கருமங்களுக்கு உரித்தான வகிபாகங்கள் முறையே
(1) உடைமையாளர், முகாமையாளர் (2) உடைமையாளர், தலைவர்
(3) முகாமையாளர், தலைவர் (4) தலைவர், உடைமையாளர்

**21.** உடைமையாளர் வகிபாகத்தை நிறைவேற்றுவதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் மேற்கொள்ளும் பணி
(1) வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்
(2) வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்
(3) நிறுவன ஊழியர்களை வழிப்படுத்தல்
(4) நிறுவனத்திற்குத் தேவையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்

**22.** காய்கறிகளைப் பயிரிட்டு விற்பனை செய்யும் வணிகமொன்றுக்கான பலம் எது?
(1) ஊழியர்கள் நன்றாகப் பணிபுரிதல்
(2) காய்கறிகளுக்கான நுகர்வோர் அதிகரித்தல்
(3) காய்கறி விவசாயிகளுக்காக அரசாங்கம் மானியங்களை வழங்குதல்
(4) வெள்ளம் காரணமாக பல காய்கறி விவசாயிகளின் அறுவடை குறைவடைதல்

**23.** பெண்கள் பெரும்பாலும், பாலர் பாடசாலைச் சேவை மற்றும் பகல் கவனிப்புச் சேவை (Day care service) போன்ற வணிகங்களை ஆரம்பிப்பதற்குக் காரணம்,
(1) பெண்களால் எந்த வேலையையும் இலகுவாகச் செய்ய முடிகின்றமையாகும்.
(2) பெண்களின் ஊழியக் கிரயம் குறைவாகக் காணப்படுகின்றமையாகும்.
(3) பெண்கள் சாதுவான பண்புகளைக் கொண்டிருக்கின்றமையாகும்.
(4) பெண்களிடையே உயர்வான வேலைவாய்ப்பின்மை காணப்படுகின்றமையாகும்.

**24.** சுதாகர் என்பவர் தேங்காய்களைப் பயன்படுத்தி புதிய பொருள் ஒன்றை ஏற்றுமதிக்காகத் தயாரித்துள்ளார். இவர் இவ்வுற்பத்திப்பொருள் தொடர்பிலான தரப் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டியது,
(1) கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.
(2) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலமாகும்.
(3) இலங்கை தர நிறுவகத்தின் மூலமாகும்.
(4) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

25. இலங்கையில் தற்போது உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துவோர் அதிகரிக்கின்றமைக்கான பிரதான காரணம்,
(1) மக்களுக்குப் பொழுதுபோக்குகளை வழங்க வேண்டியுள்ளமை ஆகும்.
(2) குறைந்த இடருடனும் குறைந்த முதலீட்டுடனும் வணிகத்தை ஆரம்பிக்கக்கூடியதாகவுள்ளமை ஆகும்.
(3) குடும்ப உறுப்பினர்களையும் நெருக்கமான நண்பர்களையும் அதிகளவில் இணைத்துக் கொள்ளக் கூடியதாகவுள்ளமை ஆகும்.
(4) அரசினால் வழங்கப்படும் நிதிசார்ந்த, நிதிசாராத ஊக்குவிப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை ஆகும்.

26. வணிகம் ஒன்றுக்கான சமூகப் பொறுப்பு பற்றிய பாரம்பரிய நோக்கு, வணிகத்தினால்
(1) அதன் உடைமையாளர்களுக்குக் கூடிய அனுகூலம் வழங்கப்படல் வேண்டும்.
(2) சூழலிலுள்ள அனைத்து விடயங்களும் பாதுகாக்கப்படல் வேண்டும்.
(3) நாட்டின் அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்யப்படல் வேண்டும்.
(4) நாட்டின் சமூக, கலாசார அபிவிருத்தி உருவாக்கப்படல் வேண்டும்.

27. சுசிலா என்பவர் தனது வணிகத்தில் இருக்கும் ஊழியர்களுக்குச் சரியான நேரத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துகின்றார். இதன் மூலம் அவர் நிறைவேற்றுவது
(1) பொருளாதாரப் பொறுப்பை ஆகும்.
(2) சட்டப் பொறுப்பை ஆகும்.
(3) ஒழுக்கப் பொறுப்பை ஆகும்.
(4) பொதுநலப் பொறுப்பை ஆகும்.

28. மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவொரு வணிக நிறுவனத்திலும் காணக்கூடிய பொதுவான குணாம்சம்
(1) சமூக நலன்களை வழங்குதல்
(2) இலாபங்களை உழைத்தல்
(3) வரையறுத்த வளங்களைப் பயன்படுத்தல்
(4) வணிகத்தைப் பதிவு செய்தல்

29. நோக்கத்தின் அடிப்படையில் வணிக நிறுவனங்களை வகைப்படுத்தும்போது, நோக்கமாகக் கருதப்படுவது யாது?
(1) தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்தல்
(2) பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்
(3) எதிர்காலத் தூரநோக்கு
(4) இலாபங்களை உழைத்தல்

30. ராகுலன் ஆரம்பித்த ‘சுகமான சுற்றுலா’ எனும் தனியுடைமை வணிகத்தின் மூலம் செய்ய முடியாதது
(1) வணிகத்துக்கான பணத்தைத் தனியாக முதலீடு செய்தல்
(2) வணிகத்தின் இலாபங்களைத் தனியாக அனுபவித்தல்
(3) தனது சொந்த விருப்பத்தில் வணிகத் தீர்மானங்களை மேற்கொள்ளல்
(4) ‘சுகமான சுற்றுலா’ எனும் பெயரில் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்

31. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் ஏனைய கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் இருந்து வரையறுத்த தனியார் கம்பனிகள் வேறுபடுவது
(1) நிலைத்திருக்கும் தன்மை மூலமாகும்.
(2) பங்குகளை வழங்குவதன் மூலமாகும்.
(3) சட்ட ஆளுமை மூலமாகும்.
(4) முகாமைத்துவத்தின் மூலமாகும்.

32. பங்குடைமை வணிகம் தொடர்பில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பங்குடைமை வணிகங்களைப் பதிவு செய்வது கட்டாயமன்று.
(2) பங்குடைமை வணிகங்கங்களுக்குத் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் தன்மை இல்லை.
(3) பங்குடைமை வணிகங்களில் ஆகக்கூடிய பங்காளர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.
(4) எல்லா பங்குடைமை வணிகமும் எழுத்து மூலமான பங்குடைமை உடன்படிக்கையைக் கொண்டு காணப்படுவதில்லை.

33. பிரரேரிக்கப்பட்ட வணிகம் ஒன்றினது சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள நிலையான சொத்து
(1) தொழிற்சாலைக் கட்டடம்
(2) அலுவலகத் தளபாடம்
(3) விநியோக வாகனங்கள்
(4) தொழிற்சாலை இயந்திரங்களும் உபகரணங்களும்

34. சனாதனனின் எதிர்பார்க்கப்பட்ட வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான கிரியமாக அமைவது
(1) ஊழியர்கள் இருவரை ஆட்சேர்ப்புச் செய்தல்
(2) அலுவலகத்திற்கான கணினியொன்றைக் கொள்வனவு செய்தல்
(3) வணிகத்திற்கான கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்
(4) வணிகக் கட்டடத்திற்கு நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

[பக். 5 ஐப் பார்க்க

35. வணிகத் திட்டம் ஒன்றின் நிர்வாகத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செலவாக அமைவது
(1) தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம்
(2) அலுவலக ஊழியர்களின் சம்பளம்
(3) விற்பனை ஊழியர்களின் சம்பளம்
(4) விநியோக வாகனச் சாரதிகளின் சம்பளம்

36. சீமெந்துக் கற்களைத் தயாரிக்கும் வணிகமொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது **பயன்படுத்தப்படாதது** யாது?
(1) சீமெந்துக் கொள்வனவு
(2) தொழிற்சாலை ஊழியரின் சம்பளங்கள்
(3) தொழிற்சாலை இயந்திரங்களின் கொள்வனவு
(4) தொழிற்சாலை மின்சாரக் கட்டணங்கள்

37. வணிகத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்போது 'உற்பத்தி முகாமையாளர்களின்' பணிகள் குறிப்பிடப்பட்டிருப்பது
(1) நிதித் திட்டத்தில் ஆகும். (2) நிர்வாகத் திட்டத்தில் ஆகும்.
(3) உற்பத்தித் திட்டத்தில் ஆகும். (4) நிறைவேற்றுச் சுருக்கத்தில் ஆகும்.

38. சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களைத் தெரிவுசெய்யும்போது சில்லறைக் கடைகள் ஊடான பொருட்களின் விநியோகமானது சந்தைப்படுத்தல் கலவை மாறியான
(1) உற்பத்திப்பொருட்களுக்கு உரித்தானதாகும்.
(2) விலைக்கு உரித்தானதாகும்.
(3) இடத்துக்கு உரித்தானதாகும்.
(4) மேம்படுத்தலுக்கு உரித்தானதாகும்.

39. பிரேரிக்கப்பட்ட வணிகமொன்றுக்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றைக் கணிப்பிடும்போது பயன்படுத்தப்படும் காசு வெளிப்பாய்ச்சலாக அமைவது
(1) வணிகத்துக்கான அலுவலகத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்
(2) வணிகத்தின் கால்கோள் விழாவுக்கான செலவுகளைச் செலுத்துதல்
(3) வணிகத்தின் கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்துதல்
(4) வணிகத்தின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துதல்

40. முன்பள்ளிச் சிறுவர்களுக்கான பைகளைத் தயாரிக்க எதிர்பார்க்கும் ஜெயம் என்பவரால் மதிப்பிடப்பட்ட செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| கட்டடத்துக்குப் பெற்றுக்கொண்ட மின்சாரம் | 20 000 |
| இரண்டு தையல் இயந்திரங்கள் கொள்வனவு | 200 000 |
| துணிகள் மற்றும் ஏனைய மூலப்பொருள்கள் கொள்வனவு | 45 000 |
| துணிகளை வெட்டுவதற்காக வாங்கிய மேசை | 30 000 |
| இரண்டு சோடிக் கத்திரிக்கோல்கள் கொள்வனவு | 5 000 |

பிரேரிக்கப்பட்ட ஜெயம் வணிகத்தின் மொத்த நிலையான சொத்துக்கள்
(1) ரூ. 230 000 (2) ரூ. 235 000 (3) ரூ. 255 000 (4) ரூ. 300 000

**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

## முயற்சியாண்மைக் கற்கை II

✻ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைக் கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமை காரணமாக சந்துரு என்பவர் தனது தந்தையாரின் வெதுப்பக வேலைகளில் உதவி புரிகின்றார். நுகர்வோரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தமது வெதுப்பக உற்பத்திப்பொருட்களைப் புதிய அமைப்பிலும் சிறந்த தரத்திலும் தயாரிக்க வேண்டுமென சந்துரு எப்பொழுதும் தனது தந்தையாருக்குக் கூறுவார். சந்துருவின் பாட்டி பிஸ்கட் போன்ற இனிப்புப் பண்டங்களை உண்பதில் அதிக பிரியமுடையவராக இருந்தார். எனினும் அவரது உடல் நிலையைக் கருத்திற்கொண்டு அவ்வாறான உணவுகளை அவருக்கு வழங்குவதில்லை. சந்துரு தனது பாட்டியின் மீது மிகவும் அன்புள்ளவராக இருந்தமையினால் தனது பாட்டி போன்ற வயது முதிர்ந்தவர்களுக்கு உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்தி அவர்களது உடல் நிலைக்குப் பொருத்தமான பிஸ்கட் வகையொன்றைத் தயாரிப்பதற்குத் தீர்மானித்ததுடன், அதனைத் தனது தந்தையாரிடம் தெரிவித்தார். இதற்காக சந்துருவின் தந்தையார் அவருக்கு ரூ.300 000ஐ வழங்கியதுடன், தனது வெதுப்பகக் கட்டடத்தின் ஒரு பகுதியையும் அடுப்பையும் பயன்படுத்த அனுமதி வழங்கினார். சந்துரு தனது சேமிப்பான ரூ. 200 000 இனையும் தனது தந்தை வழங்கிய பணத்தையும் முதலீடு செய்வதன் மூலம் 'சந்துரு பிஸ்கட்' எனும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்ததுடன், வெதுப்பக வேலைகளில் சிறந்த அனுபவமுடைய தனது தந்தையாரின் உதவியையும் பெற்றுக்கொண்டார். சந்துரு, வணிகத்தின் உடைமையையும் வணிகத்தின் இலாபத்தையும் தனக்கும் தன் தந்தையாருக்கும் வைத்துக்கொண்டு, வணிகத்தின் சகல வியாபார மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளும் அவர்களது 'சந்துரு பிஸ்கட்' வணிகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதினார்.

(i) சந்துரு எப்பொழுதும் தனது தந்தையாருக்குக் கூறும் விடயத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும், அவர் கொண்டிருக்கும் முயற்சியாண்மைசார் குணாம்சங்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) (அ) சந்துருவுக்கு இந்த வணிக எண்ணம் உருவானமைக்கான காரணம் யாது?

(ஆ) சந்துருவால் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் இலக்கு வாடிக்கையாளர் யார்?

(iii) சந்துருவால் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பலங்கள் **இரண்டினை** எழுதுக.

(iv) சந்துருவின் தேவையை நிறைவேற்றுவதற்கேற்றவாறு அவரால் ஆரம்பிக்கத்தக்க வணிக நிறுவன வகையைக் குறிப்பிட்டு, அதற்கான காரணத்தை எழுதுக.

(v) 'சந்துரு பிஸ்கட்' வணிகம் நிறைவேற்றும் மனிதத் தேவை மற்றும் விருப்பத்தைக் குறிப்பிடுக.

● பிரேரிக்கப்பட்ட சந்துரு வணிகத்திற்காக தயாரிக்கப்பட்ட வணிகத் திட்டத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்தல் | 250 000 |
| மாதாந்த மூலப்பொருள் கிரயம் | 85 000 |
| மாதாந்த ஊழியர் சம்பளங்கள் - வெதுப்பகம் | 45 000 |
| விநியோகம் | 35 000 |
| வணிகப் பதிவுக் கட்டணம் | 8 000 |
| மாதாந்த விளம்பரச் செலவு | 15 000 |
| மாதாந்த விநியோக வாகனக் கட்டணங்கள் | 20 000 |
| மாதாந்த மின்சாரக் கட்டணங்கள் | 12 000 |
| மாதாந்த விற்பனைகள் வருமானம் | 300 000 |

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki'

**வேண்டப்படுவது:** பிரேரிக்கப்பட்ட ‘சந்துரு பிஸ்கட்’ வணிகத்துக்கான பின்வருவன.

(vi) மொத்த முதலீடு

(vii) (அ) ஆரம்பிப்பதற்கு முன்னரான கிரயம்

(ஆ) மொத்த நிலையான சொத்துக்கள்

(viii) உற்பத்தித் திட்டத்தில் இருந்து எடுக்கக்கூடிய **இரண்டு** செலவுகள்

(ix) மாதாந்த மொத்த சந்தைப்படுத்தற் செலவுகள்

(x) (அ) மொத்த காசு உள்வருகைகள்

(ஆ) மாதாந்த தேறிய இலாபம்

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) ஏனைய உற்பத்திக் காரணிகளிலும் பார்க்க முயற்சியாண்மை ஏன் மிகவும் முக்கியமானது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(ii) இலங்கையின் தற்போதைய சந்தையின் மாற்றங்கள் மீது முயற்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **இரண்டு** வணிகங்களைக் குறிப்பிடுக.

(iii) சமூக முயற்சியாளர் ஒருவரின் கருமங்களை உதாரணமொன்றின் மூலம் விளக்குக.

(iv) முயற்சியாண்மை அபிவிருத்தியின் ஊடாக எந்தவொரு நாடும் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினை** எழுதுக.

(v) ஆக்கத்திறனுக்கான தடைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**3.** (i) சிற்றளவு வணிகங்களின் பலங்கள் **இரண்டையும்** வரையறைகள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(ii) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிற்றளவு வணிகங்கள் பங்களிப்புச் செய்யக்கூடிய விதங்கள் **நான்கினை** எழுதுக.

(iii) சிற்றளவு வணிகர் ஒருவர் தனது வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காகப் பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினை** எழுதுக.

(iv) முயற்சியாளர் ஒருவர் தலைவர் வகிபாகத்தை நிறைவேற்றுவதன் மூலம் தனது வணிகத்திற்காகச் செய்யும் கருமங்கள் **இரண்டினை** எழுதுக.

(v) முயற்சியாளர் ஒருவரின் எண்ணக்கருவாக்கத் திறன்களை முன்னேற்றுவதன் முக்கியத்துவத்தை **இரண்டு** உதாரணங்களூடாக விளக்குக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**4.** (i) முயற்சியாளருக்கும் வணிகச் சூழலுக்கும் இடையிலான தொடர்பைச் சுருக்கமாக விளக்குக.

(ii) வணிகங்களில் தாக்கம் செலுத்தும் அரசியல் மற்றும் சட்டச் சூழல் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) வணிகமொன்றின் அகச்சூழலுக்கு உரித்தான **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iv) தற்போதைய வணிகச் சூழலில் காணக்கூடிய குணாம்சங்கள் **நான்கினை** எழுதுக.

(v) சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ள கமலன் என்பவரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய புறச் சூழல் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**5.** (i) ‘ஜனகன் என்பவர் அரசாங்க வைத்தியசாலையில் இருந்து சில மருந்துகளைப் பெற்றுக்கொண்டு, ரூபனின் பழக்கடையில் இருந்து சில பழங்களைக் கொள்வனவு செய்தார்’. இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள **இரண்டு** வணிகங்களையும் குறிப்பிட்டு, உடைமையின்படி அவை உரித்தாகும் வணிக நிறுவன வகையைத் தனித்தனியாக எழுதுக.

(ii) உடமையைப் பேணுவதுடன் இலாபத்தையும் தான் மட்டுமே அனுபவிக்கக்கூடியதாக முயற்சியாளர் ஒருவரால் ஆரம்பிக்கக்கூடிய வணிக நிறுவன வகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) ‘சுவையான உணவுகள்’ என்ற பெயரில் தனது வணிகத்தைப் பதிவு செய்வதற்காக பிரதேச செயலகத்திற்குப் பதிவுக் கட்டணத்துடன் நசீர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) முயற்சியாளர் ஒருவர் தனது வணிகத்தைப் பங்குடைமையாக ஆரம்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினை** எழுதுக.

(v) அங்கிகார வணிகமொன்றை ஆரம்பித்தல் மற்றும் கொண்டு நடாத்துதல் தொடர்பான பொதுவான உடன்படிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

6. (i) இலங்கையில் முயற்சியாண்மைசார் கலாசாரத்தை உருவாக்குவதில் தீர்வுகளைக் கண்டுபிடிக்கத்தக்க பிரச்சினைகள் **இரண்டினை** எழுதுக.

(ii) வணிக ஒழுக்கத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** தரப்பினரைக் குறிப்பிடுக.

(iii) முயற்சியாளர் ஒருவர் சட்டப் பொறுப்பை நிறைவேற்றக்கூடிய விதங்கள் **இரண்டினை** எழுதுக.

(iv) முயற்சியாளராவதற்குப் பெண்ணொருவர் கொண்டிருக்க வேண்டிய பலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(v) ஒரு நாட்டில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் நிதிசார்ந்த ஊக்குவிப்புக்கள் **இரண்டையும்** நிதிசாரா ஊக்குவிப்புக்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

7. (i) பாடசாலை ஒன்றினால் தயாரிக்கப்படும் திட்டமிடல் அறிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ii) உற்பத்தித் திட்டத்தில் உள்ளடங்கும் தகவல்கள் **நான்கினை** எழுதுக.

(02 புள்ளிகள்)

(iii) நீலா என்பவரின் எதிர்பார்க்கப்பட்ட வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட சில செலவீனங்களும் வருமானங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட் கிரயம் ........................................ | 250 000 |
| ஊழிய மற்றும் ஏனைய உற்பத்திக் கிரயம் ........ | 150 000 |
| விற்பனை விநியோகச் செலவுகள் ......................... | 40 000 |
| நிர்வாகம் மற்றும் நிதிச் செலவுகள் ..................... | 60 000 |
| விற்பனை வருமானங்கள் .................................... | 600 000 |

**வேண்டப்படுவது:**

நீலாவின் வணிகத்தின் முதல் மாதத்திற்கான மொத்த உற்பத்திக் கிரயம், மொத்த உற்பத்தியல்லாத கிரயம் மற்றும் தேறிய இலாபம் என்பவற்றை எடுத்துக்காட்டக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் இறுதிப் பெறுபேற்றுக்கான கணிப்பீட்டுக் கூற்றைத் தயாரிக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

Book Medium | Book Type | Publisher



O/L Science Past Paper Book 2025 (English Medium) | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L Mathematics Past Paper Book 2025 | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO




O/L Science Past Paper Book 2025 | Master Guide

★★★★★ 02

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L Mathematics Past Paper Book 2025 (English Medium) | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L English language Past Paper Book 2025 | Master Guide

රු 650.00

or 3 X රු 216.67 with KOKO



O/L Sinhala Language Past Paper Book 2025 | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L History Past Paper Book 2025 | Master Guide

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO



O/L Buddhism Past Paper Book 2025 | Master Guide

රු 625.00

or 3 X රු 208.33 with KOKO



O/L Second Language Tamil Past Paper Book | Master Guide

★★★★★ 01

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



O/L Second Language Sinhala Past Paper Book | Master Guide

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



O/L Design And Construction Technology Past Paper Book 2024 | Master Guide

රු 550.00

or 3 X රු 183.33 with KOKO



O/L Mathematics Past Paper Book (Tamil Medium ) | Master Guide

රු 750.00


or 3 X රු 250.00 with KOKO



O/L Design And Mechanical Technology Past Paper Book 2024 | Master Guide

රු 550.00

or 3 X රු 183.33 with KOKO



O/L Appreciation of English Literary Text Past Paper Book 2024 | Master Guide

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO



My Tutor O/L Christianity Past Papers Book – Sinhala Medium

රු 890.00

or 3 X රු 296.67 with KOKO



My Tutor O/L ISLAM Past Papers Book – Sinhala Medium

රු 890.00

or 3 X රු 296.67 with KOKO



O/L Home Economics Past Paper Book 2025 | Master Guide

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



My Tutor O/L Design and Mechanical Technology Past Papers Book – Sinhala Medium

රු 890.00

or 3 X රු 296.67 with KOKO



O/L Drama and Theatre Past Paper Book 2025 | Master Guide

රු 650.00


or 3 X රු 216.67 with KOKO



O/L ICT Past Paper Book 2025 | Master Guide

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



O/L Western Music Past Paper Book 2024 (English Medium)| Master Guide

රු 650.00

or 3 X රු 216.67 with KOKO



O/L Communication And Media studies Past Paper Book 2025 | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



My Tutor O/L Catholicism Past Papers Book – Sinhala Medium

රු 890.00

or 3 X රු 296.67 with KOKO



O/L Entrepreneurship Studies Past Paper Book 2025 | Master Guide

රු 575.00

or 3 X රු 191.67 with KOKO



O/L Agriculture and Food Technology Past Paper Book 2025 | Master Guide

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



O/L Art Past Paper Book 2025 | Master Guide

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



O/L Civic Education Past Paper Book 2025 | Master Guide

රු 650.00

or 3 X රු 216.67 with KOKO



O/L Dancing Past Paper Book 2025 | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L Health Past Paper Book 2025 | Master Guide

රු 650.00

or 3 X රු 216.67 with KOKO



O/L Business & Accounting Studies Past Paper Book 2025 | Master Guide

රු 675.00

or 3 X රු 225.00 with KOKO



O/L Music Past Paper Book 2024 | Master Guide

රු 650.00


or 3 X රු 216.67 with KOKO



O/L Geography Past Paper Book 2025 | Master Guide

රු 700.00

or 3 X රු 233.33 with KOKO



O/L Sinhala Sahithya Rasaswadaya Past Papers Book

රු 890.00


or 3 X රු 296.67 with KOKO



O/L Western Music Past Paper Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L Buddhism Past Papers Book

රු 1,290.00


or 3 X රු 430.00 with KOKO



O/L ICT Past Paper Book 2025 (English Medium) | Master Guide

රු 625.00

or 3 X රු 208.33 with KOKO



English Medium O/L Catholicism Past Papers Book

රු 590.00

or 3 X රු 196.67 with KOKO



O/L English Literature Past Papers Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L ISLAM Past Papers Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L HEALTH Past Papers Book

රු 1,290.00


or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L History Past Papers Book

රු 1,290.00


or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L Christianity Past Papers Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L Geography Past Papers Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



O/L FRENCH Past Papers Book

රු 1,290.00


or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L CIVICS Past Papers Book

රු 1,290.00

or 3 X රු 430.00 with KOKO



English Medium O/L Science Past Paper Book | Loyal Publication

රු 650.00

or 3 X රු 216.67 with KOKO



My Tutor O/L Music Past Papers Book – Sinhala Medium

රු 890.00

or 3 X රු 296.67 with KOKO



English Medium O/L ICT Past Paper Book | Loyal Publication

රු 625.00

or 3 X රු 208.33 with KOKO



English Medium O/L English Literature Past Paper Book | Loyal Publication

රු 575.00


or 3 X රු 191.67 with KOKO



English Medium O/L English Past Paper Book | Loyal Publication

රු 675.00

or 3 X රු 225.00 with KOKO



English Medium O/L Civic Education Past Paper Book | Loyal Publication

රු 500.00


or 3 X රු 166.67 with KOKO



Astan Publication O/L Second Language Sinhala Past Paper Book(Tamil Medium)

රු 700.00


or 3 X රු 233.33 with KOKO



Astan Publication O/L Science Past Paper Book(Tamil Medium)

රු 970.00


or 3 X රු 323.33 with KOKO



Astan Publication O/L Saivaneri Past Paper Book(Tamil Medium)

රු 520.00

or 3 X රු 173.33 with KOKO



English Medium O/L Business Studies Past Paper Book | Loyal Publication

රු 725.00

or 3 X රු 241.67 with KOKO